17.02.2026

அ.வ.எண். 225/2021

வா.சா.1 – திரு. பிரபாகரன், த/பெ. தெய்வசிகாமணி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 17.02.2026 is accordance with the provision of Act X of 3331

**6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னிடம் காட்டப்படும் பொது அதிகார ஆவணம் மூலமாக வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணத்தை முன் ஆவணமாக சொல்லி என் தகப்பனார் தெய்வசிகாமணி(1ம் பிரதிவாதி) 03.01.2013 ல் சேமலை மனைவி லட்சுமிக்கு தாவா சொத்தின் ஒரு பகுதி குறித்து பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். **03.01.2013 தேதியிட்ட லட்சுமி பெயரில் உள்ள பொது அதிகார ஆவணம் பி.சா.ஆ.2** ஆக குறியீ டு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 25.07.2012 தேதியிட்ட என் தகப்பனார் தெய்வசிகாமணி(1ம் பிரதிவாதி), ராமசாமி மற்றும் ஆறுமுகம் ஆகியோருக்கு மற்றொரு பகுதி குறித்து பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். **25.07.2012 தேதியிட்ட ராமசாமி, ஆறுமுகம் பெயரில் உள்ள பொது அதிகார ஆவணம் பி.சா.ஆ.3** ஆக குறியீ டு செய்யப்படுகிறது.

2. பி.சா.ஆ.3 பொது அதிகார ஆவணத்தில் நான் 1வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.2 பொது அதிகார ஆவணத்தில் நான் 2வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2 பொது அதிகார ஆவணங்களையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில், கண்ட சொத்தை விற்க சரத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்து என சொல்லாமல் நானும், என் தகப்பனாரும் தாவா சொத்துக்களை தனிப்பட்ட சொத்துக்களாக காட்டி விற்க முயற்சி செய்ததாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பிதுரார்ஜித சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது. சாட்சி மீண்டும் பிதுரார்ஜித சொத்து அல்ல அனுபவத்தில் உள்ளது என சாட்சியம் அளிக்கிறார்.

3. பி.சா.ஆ.2 ஆவணத்தில் ஒட்டப்பட்டுள்ள என் தகப்பனார் தெய்வசிகாமணியின் புகைப்படமும், வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணத்தில் ஒட்டப்பட்டுள்ள ரங்கசாமியின் புகைப்படமும் ஒன்று தான் என்றால் புகைப்படம் மாற்றி ஒட்டப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு புகைப்படத்தையும் நான் தான் எடுத்து சென்றேன் என்றால் என் தகப்பனார், தாத்தா எடுத்து சென்றனர். பத்திரபதிவு நடைமுறைகள் வழக்கமாக தெரியும் என்றால் தெரியாது. புகைப்படத்தில் பெயர் எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் தான் மேற்படி புகைப்படத்தை பத்திரபதிவு அலுவலகத்தில் வைத்து ஒட்டினேன் என்றால் சரியல்ல. பத்திரபதிவு அலுவலகத்தில் சார் பதிவாளர் வாங்கி ஒட்டுவது அவரது வழக்கமான பணி அல்ல என்றால் சரிதான்.

4. என் மீது கருமத்தம்பட்டி, சூலூர் காவல் நிலையத்தில் குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் போராட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் என்னுடைய புகைப்படம் தேடப்படும் குற்றவாளி பட்டியலில் உள்ளது என்றால் இல்லை.

<u>**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

குறுக்குவிசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur